

சென்னை மெட்ரோ ரெயிலில்

# கடந்த மாதம் மட்டும் 3,792 மாணவர்கள் கல்வி பயணம்

சென்னை, பிப்.6–

சென்னையில் ஓடும் மெட்ரோ ரெயில் பற்றி அரசு பள்ளி மாணவர்கள் இடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மாதாந்திர கல்வி பயணத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. அதன்படி, சென்னை சென்டிரல்–விமான நிலையம், ஏ.ஜி. டி.எம்.எஸ்.(தேனாம்பேட்டை)–விமான நிலையம் வழித்தடத்தில் மாணவர்களை மெட்ரோ ரெயில் நிர்வாகம் அழைத்துச் செல்கிறது. இந்த பயணத்தின்போது மெட்ரோ ரெயில் சேவை பற்றியும், அதன் ரெயில் நிலையங்களின் சிறப்பம்சங்கள் பற்றியும் மாணவர்களுக்கு விளக்கம் அளிக்கப்படுகிறது.

2018–19 கல்வி ஆண்டில் அரசு மற்றும் மாநகராட்சி பள்ளி மாணவர்களுக்கு கல்வி பயணம் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த ஜனவரி மாதம் மட்டும் 3 ஆயிரத்து 792 மாணவர்கள் மெட்ரோ ரெயிலில் கல்வி பயணம் சென்றுள்ளனர். 2018–19 கல்வி ஆண்டில், கடந்த ஜூன் மாதம் முதல் மெட்ரோ ரெயிலில் கல்வி பயணம் தொடங்கப்பட்டது. அன்றில் இருந்து இது வரை அரசு மற்றும் மாநகராட்சி பள்ளிகளை சேர்ந்த 26 ஆயிரத்து 310 மாணவர்கள் மெட்ரோ ரெயிலில் கல்வி பயணம் அழைத்து செல்லப்பட்டுள்ளனர்.

மேற்கண்ட தகவல் சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.